ஜாதி வேறுபாட்டைக் களையும் சர்க்காரா இது?

மதுபோதையை அகற்றிய சர்க்காருக்கு ஜாதிபோதையை ஒழிப்பதா கடினம்?

—————:0:—————

சீர்திருத்தம் கண்டு சீறுகின்றீர்: செயல் நடத்துவோரைச் சாடுகின்றீர்!

—————:0:—————

நல்லெண்ண நாட்டமிருந்தால் அடக்குமுறை ஈட்டிகளேன்?

சென்னை மாகாணத்தில் இந்துக்களிடையே நிலைபெற்றிருக்கும் ஜாதி முறையை ஒழிக்க சர்க்கார் எடுத்திருக்கும் நடவடிக்கை என்ன?

ஒன்றுமில்லை. சர்க்காரின் நடவடிக்கை மூலம் ஜாதிமுறை மறைந்துவிடாது. ஜாதி வேறுபாடுகளை எதிர்த்து அடுவருக்கும் அளவுக்குப் பொதுமக்கள் வந்துவிட்டால், அவை தாமே மறைந்தொழியும்.

ஜாதி முறையைக் களையும் வகையில் கலப்பு மணங்களுக்கு ஊக்கமும் ஆதரவும் தர முன்வருமா சர்க்கார்?

சர்க்காரின் ஊக்கத்தையும் ஆதரவையும் பெற கலப்பு மணம் ஒரு கைத்தொழில் என்று எனக்குத் தோன்றவில்லை.

ஜாதிமுறை ஒழியவேண்டுமென்பதில் சர்க்கார் உள்ளபடியே சிரத்தைகொண்டவர்களாயிருந்தால், அதை ஒழிப்பதற்கு சாதகமாக மக்கள் கருத்தைத் திருப்ப வழிவகை மேற்கொள்வாரா சர்க்கார்?

அப்படியே செய்வோம். ஜாதிமுறையை அகற்றுவதில் நாங்கள் உள்ளபடியே அக்கரைகொண்டிருக்கிறோம். உறுப்பினர் வேலைத் திட்டமொன்றைத் தயாரித்து, அதில் என்னையும் கலந்துகொள்ள வேண்டுமென்று விரும்புவாரேல், நான் அதில் தடையின்றி கலந்து கொள்வேன்.

கலப்பு மணம் செய்துகொண்டோர்க்கு சர்க்கார் நியமனங்களில் சலுகை தந்து, அதன் மூலம் கலப்பு மணங்களை ஊக்குவிக்குமா சர்க்கார்?

இது பயன்தரத்தக்க யோசனையே. இது ஆலோசிக்கப்படும்.

Phone No. 4602

விலை அணா ஒன்று

Regd. No. M. 5458

[இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. MALAIMANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (24—11—49) வெளியீடு (25—11—49) [இதழ் 99

தியாகிகளுக்குப் புதுப் பரிசு!

நிலங்களுக்குப் பதில் காடுகளாம்!

அரசியல் தியாகிகள் தமது தியாகத்துக்குக் கூலியாக நிலம் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதில் பயனில்லை. ஏனெனில், சாகுபடி செய்யக்கூடிய நிலம் வேண்டிய அளவு இல்லையாம். ஆனால் நிலங்களுக்குப் பதில் காடுகளை வழங்கலாம், என்று அரசியலார் ஆலோசித்து வருகிறார்களாம். காடுகள் என்றவுடன் யாரும் பயந்துவிடவேண்டாம். நமது அரசியலார் என்ன அவ்வளவு நன்றி கெட்டவர்களா? நாட்டு விடுதலையைத் தேடித்தந்த தியாகிகளை நாடாளச் சொல்லுவதற்குப் பதிலாக காடாளச் சொல்லுகிறார்களே என்று கேட்டுவிடாதீர்கள். காடு என்றால் அசல் காடல்லவாம்! பொட்டலில் காடுகள் என ரிசர்வ் செய்யப்பட்டிருக்கும் பகுதிகள், சில சாகுபடிக்குத் தகுந்தவைகளாக இருக்கின்றனவாம்; அவற்றைத் தியாகிகளுக்குப் பரிசாக வழங்கும் திட்டம் அரசியலாரால் ஏற்றுக்கொள்ளப்படுமானால், சுமார் 1200 ஏக்கர் நிலங்களை 120 தியாகிகளுக்குக் கொடுக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

"மிக உயர்ந்தது: இல்லை, மிக மோசமானது"!

அரசியலமைப்பு (நாடக) சபையில் உறுப்பினர்கள் திருக்கூத்து!

இந்தியாவின் புதிய அரசியலின் மூன்றுவது வாசிப்பு ஐந்தாவது நாளாக 22-ந் தேதி யன்று தொடர்ந்தது.

புதிய அரசியலின் மிக மிகக் குறிப்பிடத்தக்கதொரு அம்சம் மதச்சார்பற்றசர்க்கார் வரையறுத்துக் கூறப்பட்டிருப்பதுதான் என்று பேகம்ரசூல் தெரிவித்தார்.

புதிய அரசியலின் மிக மிக மோசமான அம்சம், உலகிலேயே உயர்ந்த இந்து மதம் அதில் இடம் பெறாததுதான்' என்று டாக்டர் புஞ்சாபிரௌ தேஷ் முக் (மத்திய மாகாணம், பீரார்) குறிப்பிட்டார்.

அரசியலில் 'ஆத்மீக அடிப்படை'யைக் காணோமே என்று தோழர் ஸ்யாமானந்தன் சஹாய் (பீகார்) குறைபட்டார்.

இந்தியாவின் புதிய அரசியலின் குறிப்பிட்டதொரு அம்சத்தை, அரசியலமைப்பு சபையின் இரு உறுப்பினர்கள் இருவேறு கோணங்களில் நின்று பார்த்து தங்கள் கருத்தை வெளியிட்டுள்ளனர். ஒரு குறிப்பிட்ட அம்சம் ஒருவருக்கு மிக மிக உயர்ந்த தாகவும், மிக மிக மோசமான தாகவும் தோற்றமளித்திருக்கிறது. ஆனல் நாம் கேட்கிறோம், "மக்களின் பிரதிநிதிகளாக மன்றம் ஏறியிருக்கும் நீவிர், உங்கள் கூற்றுக்களுக்கு ஆதாரமாக எதை யெதைக் கொண்டிருக்கிறீர்கள்" என்று. புதிய அரசியலின் தத்துவம் மதச்சார்பற்ற சர்க்கார் தான் என்று எதைக்கொண்டு சொல்கிறார் பேகம் ரசூல் என்று கேட்கிறோம். அதுபோலவே, இந்துமதம் அரசியலில் இடம் பெறவில்லை யென்று குறைபடுகிறாரே டாக்டர் தேஷ்முக, அவர் கூற்று ஆதாரம் என்ன வென்று கேட்கிறோம். இந்துமதம் கற்பிக்கும் வர்ணாஸ்ரமம் தண்டிக்கப் படுகிறதா, மனுதர்மம் கடியப்படுகிறதா, உயர்வு தாழ்வைப் போதிக்கும் வேத—புராண—சாஸ்திரங்கள் ஒதுக்கப்படுகின்றனவா, புதிய அரசியலில் என்று கேட்கிறோம். வேத புராண சாஸ்திர ஸ்மிருதிகள் நிலை பெறப் போகின்றன, அவற்றின் வழி இந்து மத கோரம் தலைவிரித் தாடப்போகிறது—இப்படி இருந்தும் ஏன். குறைபடுகிறார் டாகடர் தேஷ் முக் என்று தான் கேட்கிறோம்!

சென்னை சட்டசபையில்

சென்னை சட்டசபையில் செவ்வாயன்று உறுப்பினர்கள் பலர் கேட்ட கேள்விகளையும் அதற்கு சபைமுதல்வர் (லீடர்) அளித்த விடைகளையும் மேலே தந்திருக்கிறோம். ஏறத்தாழ பத்துஉறுப்பினர்கள்வரை இக்கேள்விகள் கேட்பதில் ஈடுபட்டிருந்திருக்கின்றனர். சர்க்காருக்கோ, அன்றி மந்திரிமார்களுக்கோ, ஜாதி வேறுபாடுகளை ஒழிப்பதில் அக்கரை இருந்தாலும் இல்லாவிட்டாலும், நூற்றுக்கணக்கான உறுப்பினர்களைக் கொண்ட கீழ்—மேல் சபைகளில் ஒரு பத்துப் பேருக்காவது இவ்வெண்ணத்தை வெளியிட வேண்டுமென்ற தீவிரம் வந்துற்றது பாராட்டுக்குரியதேயாகும். சட்டசபையில் இந்த சந்தர்ப்பத்தில் இத்தகைய கேள்விகள் எழுப்பப்படுவதற்கான காரணம் ஜாதி வேறுபாடுகளொழிந்த, உயர்வு—தாழ்வற்ற சமுதாயம் மலர வேண்டுமென்ற நல்லெண்ணமா, அல்லது இதுவரையில் தாங்களே ஏகபோகமாக அனுபவித்துவந்த உத்தியோகம், உயர்வு இனனபிற சலுகைகளை இனியுந் தொடர்ந்து ஆதிக்கப்படுத்தி வரவேண்டுமென்ற பேராசையால் உந்தப்பெற்ற 'ஒரு கூட்டத்தாரின் திரைமறைவுவேலையா' என்பது பற்றி இன்றைய நடப்பறிந்தோருக்கு சம்சயம் வரத்தான் செய்யுமெனினும், திறந்த உளத்தோடே நாம் இதனைக் கவனிக்க ஆசைப்படுகிறோம்.

ஆதிக்கக் கும்பலொன்று ஆண்டு பலவாக அனைத்துத் துறைகளிலும் ஏகபோகமாக 'அனுபோகபாத்தியம்'கொண்டாடி வந்தது, இப்போது ஓரளவு சரிந்துவிடப்பட்டு வருதல்கண்டு, அதற்கு ஆத்திரமும் கோபமும் வருதல் இயற்கையே. சமுதாயத்தில் உயர்ந்த நிலையிலுள்ள உயர் பிறப்பாளர் என்று கூறிக்கொண்டு இதுவரை சகல உரிமைகளையும் சலுகையோடு பெற்று வந்தோம்; இப்போது காலம் மாறி வருவதால் இனி உயர் பிறப்பாளர் என்றுகூறி உயர்வு தேடிக்கொள்ள, இயலாது, 'உங்களோடு ஒத்த பிறப்பாளரே' என்று மேலாகச் சொல்லிக்கொண்டு, மேலும் சுரண்டலைத் தொடர்ந்து நடத்தலாமென்ற திட்டத்தில அக் கும்பல் இப்போது புறப்பட்டிருக்கிறது. 'வகுப்பு வாரி பிரதி நிதிதவம் கோருவது பிற்போககுத்தனம்' என்று கூறுமளவுக்கு முற்போக்கு அடைந்துவிட்டதாகக்காட்டிக் கொள்கிறது. அத்தகைய 'ஏகபோக ஆதிக்க சுரண்டல் கும்பலின்' சமீபகால நடவடிக்கைகளுக்கும் சட்டசபை உறுப்பினர்களின் கேள்விகளுக்கும் எத்தகைய தொடர்பும் இராதென்றே உறுதியாக நம்புகிறோம்; இருக்கக் கூடாதென்பதும் நம் பேரவாவாகும்.

ஜாதி ஒழியவேண்டுமென்று நாம் சொல்வதற்கும் பார்ப்பனத் தோழர்கள் இப்போது சொல்ல ஆரம்பித்திருப்பதற்கும் அடிப்படையிலேயே வேற்றுமையுண்டு, பிறப்பினால் உயர்வு—தாழ்வு, ஜாதி அகங்காரம் ஆணவம், வெறி, பூசல், போராட்டம் இன்ன பிற மண்ணோடு மண்ணாய் மறைந்து கீழ்மை,இழிவு

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

'மக்கள் பிரதிநிதிகள்' பவனிவந்த நாள் பட்டியல்!

—————: (0) :—————

'பல்வேறு காரியங்களுக்கு' உலா சென்று திரும்பினராம்

இவ்வாண்டு மே, ஜூன், ஜூலை, ஆகஸ்ட், செப்டெம்பர் மாதங்களில் சென்னை மந்திரிகள் சென்னையில் இருந்த நாள் எண்ணிக்கையையும், வெளியில் சுற்றுப்பயணம் நிகழ்த்திய நாள் எண்ணிக்கையையும் சட்டசபையில் மந்திரி கோபால் ரெட்டி கேள்வியொன்றுக்குப் பதில் கூறுகையில் வெளியிட்டார். அவையாவன:

பிரதமர்: சென்னையில் 106½ நாள்; சுற்றுப்பயணத்தில் 46½ நாள்.

டாக்டர் ராஜன்	107: 46
தோழர் எம். பக்தவத்சலம்	102:51
தோழர் பி. கோபால்ரெட்டி	108:55
தோழர் கே. மாதவமேனன்	86:67
தோழர்எச்.சீதாராமரெட்டி	110:43
தோழர் ஏ. பி. ஷெட்டி	126:27
தோழர் கே. சந்திரமௌலி	100:53
தோழர் பி பரமேஸ்வரன்	82:41 (செப்டெம்பரில் வெளியே போகவில்லை)
தோழர் எம். சஞ்சீவிரெட்டி	92:60½
தோழர் இ. பெருமாள்சாமி ரெட்டி	101:46
தோழர் ரோச்விக்டோரியா	71:51 (ஜூனில்தான் பதவியேற்றார்)

மாகாண நிலையை அறிய மந்திரிகள் சுற்றுப்பயணம் செய்தனரா, அன்றி, வேறு விசேஷங்களில் கலந்து கொண்டனரா என்று தோழர் ரஸாக்கான் கேட்டதற்கு, 'பல்வேறு காரியங்களுக்காக' சுற்றுப்பயணம் மேற்கொண்டனரென மந்திரி தெரிவித்தார்.

அதில் வருமானம் அதிகம்!

தலைவர் ட்ரூமனின் முக்கியமான மந்திரிகளுள் ஒருவரான தோழர் சி. கிளிபோர்டு அடுத்தாண்டு துவக்கத்தில் தனது பதவியை ராஜினாமா செய்துவிடுவாரெனத் தெரிகிறது. இவர் ட்ரூமனின் விசேஷ ஆலோசகர்களுள் ஒருவராவர். இவருக்கு ஆண்டொன்றுக்கு 20,000 டாலர் சம்பளமென்றும், இப்போது இப்பதவியை விட்டு இன்னும் அதிகமாய் சம்பாதிக்கலாமென்ற திட்டத்தின் வக்கீல் தொழிலை மேற்கொள்ளப்போகிறாரென்றும் கூறப்படுகிறது.

முடங்கிக் - கிடக்கின்றன!

சர்க்கார் கதர் உற்பத்தி நிலையங்களில் (செப். 30 வரை) 5,68,181 கஜம் கதர் முடங்கிக் கிடக்கிறதென்றும், அதன் மதிப்பு ரூ. 7,98,118 என்றும் மந்திரி தோழர் பி. பரமேஸ்வரன் சென்னை சட்டசபையில் 22-ந் தேதி குறிப்பிட்டார்.

மாலை மணி

சென்னை 24—11—49 வியாழக்கிழமை

விழலுக்கு இறைக்கும் நீர்!

ஆடும் கான மயிலைப் பார்த்து வான்கோழி, "என்னைப் போல் ஆடுவையோ"? என்று கேட்டால்; கூவும் குயிலைக் கண்டு கரையுங் காக்கை, "உன் பாட்டு என் பாட்டுக்கு ஈடாகுமோ?" என்று வினவினல்; இன்சுவைத் தேமாங்கனியை நோக்கி காஞ்சிரங்காய், "என்சுவையை விட உன் சுவை மிக இனிப்பாகுமோ?" என்று கடாவினல் அவைகளைப் பற்றி என்ன நினைப்பீர்கள்! கேட்டவுடன் சிரிப்பீர்கள்! அல்லவா! வான் கோழி-காக்கை-காஞ்சிரங்காய் இவை மூன்றும் தம்நிலை யுணராமல்—உணராததுமட்டுமல்ல தம்மைப்பற்றி மிகவாகவும் எண்ணிக்கொண்டு—பொருத்தமில்லா தனவற்றை அறியாமையின் காரணமாகக் கருதுகின்றன என்றுதானே எண்ணுவீர்கள். அந்த எண்ணம் சிரிப்பைத் தானே விளைவிக்கும்! அது போன்று சிரிப்பைத் தரும் சொல்லாடல், கதருக்கும் மில் துணிக்கும் இடையே நடந்திருக்கிறது!

கதர்த் துணி, மில் துணியைப் பார்த்து, 'நீ என்ன, என்னைவிட நீண்ட நாள்களுக்கு உழைக்கக்கூடிய உறுதி படைத்தவனு? அல்லது என்னைவிட குறைந்த தொகைக்கு வேலை செய்பவனு? நான்தானே விலைமலிவாகவும் விற்கப்படுகிறேன், நீண்டநாள்களுக்கு உழைக்கக் கூடிய உறுதியும் படைத்திருக்கிறேன்!" என்று கேட்டால், இல்லை, கேட்கும்படி வைத்தால், என்ன நினைப்பீர்கள் இரண்டினையும் நன்கு அறிந்தவர்கள்? கேலிச்சிரிப்பு சிரிப்பதைத் தவிர வேறு என்ன செய்வீர்கள்!

மில் துணியைவிட கதர்த் துணி நீண்ட நாள்களுக்குத் தாங்கக்கூடியதாகும், விலை மலிவுள்ளதாகவும் இருக்கின்றது என்ற 'உண்மையை (?)'க் கிராம அபிவிருத்தி மந்திரி தோழர் பி. பரமேசுவரன் சென்னை சட்டசபையில் பிரகடனப்படுத்தியுள்ளார்! இந்த 'உண்மையை' அவர் மட்டுமே கண்டறியவில்லை, தோழர் வரதாச்சாரியாரும் சேர்ந்தே கண்டறிந்திருக்கிறார்கள்! இந்தக் கருத்தில் தோழர் கே. வரதாச்சாரியாரோடு, தம கருத்தும் ஒத்திருப்பதாக வெளியிட்டுள்ளார் மந்திரியார்!

கதர், மில் துணியைவிட மலிவாம்-உறுதி உடையதாம்! நீண்ட நாள்களுக்கு நிற்கக் கூடியதாம்! இது மந்திரி பரமேஸ்வரனின் கூற்று! இந்தக் கூற்றை எப்பொழுது கூறுகிறார் என்றால், அரசாங்கச் செலவில் தயாராகும் கதரில் 5,68,181 கஜம் துணி விலை போகாமல் தேங்கிக்கிடக்கிறது என்ற செய்தியை வெளியிடும் போதுதான் "நல்ல மாடாக இருந்தால் உள்ளூரிலேயே விலைபோகுமே!" என்றொரு பழமொழி கூறுவதுண்டு. அதுபோல, மந்திரியார் கூறுகின்ற அளவு திறம் கதருக்கு உண்டு என்றால், அவ்வளவும் விலைபோயிருக்க வேண்டுமே! ஏன் தேக்கம் ஏற்பட்டது? மக்கள் ஏன் வாங்க மறுக்கின்றனர்? இது தான் கதரின் திறத்தைக் காட்டும் அறிகுறியா? இந்தக் கதர்த்துணித் தேக்கத்தின் மூலம் ரூ. 7,98,118 தேக்கப்பட்டுக் கிடக்கின்றன என்றும் கூறுகிறார் மந்திரியார்! கதரைப் பற்றி மந்திரியாரும், வரதாச்சாரியார் போன்ற காங்கிரஸ்காரர்களும் போடும் மதிப்பு, எந்த அளவுக்கு நடைமுறைக்குப் பொருந்திருக்கிறது என்பது, இந்தத் தேக்க நிலையைக் காணுவதன் மூலமே எளிதில் அறிந்து கொள்ளலாமே! இதற்கு அபூர்வ ஆராய்ச்சி கூடத் தேவையில்லையே!

மில் துணியை விட கதர் விலை மலிவு—உடைகட்டி வரக்கூடியது என்றால், வறுமையில் உழலும் பொதுமக்கள் கதரைத்தானே வாங்கியிருப்பார்கள்! ஆனல் பொது மக்களினுடைய மோகம் மில் துணிப் பக்கம்தான் திரும்பி இருக்கிறது என்றால், அது எதனைக் காட்டுகின்றது? விலைமலிவாகவும் இருக்கிறது, நீண்ட நாள் வரக்கூடியதாகவும் இருக்கிறது—அழகாகவும் இருக்கிறது—மிருதுவாகவும் இருக்கிறது—மென்மையாகவும் இருக்கிறது—உடலுக்கு உகந்ததாகவும் இருக்கிறது என்பதைத்தானே காட்டுகின்றது! இது தெளிவாகத் தெரிந்த பிறகும்--கதர் விலை போகாச் சரக்காகவே தேங்கிக் கிடக்கிறது என்பதைக் கண்ட பிறகும்-வலுக்கட்டாயமாகப் புகுத்தினலொழிய கதர்விற்பனை ஆகாது என்பதை உணர்ந்த பிறகும், கதரினுடைய பெருமையை மந்திரியார் புகழ்கின்றார் என்றால், அது கதரினிடத்து அவருக்குள்ள பக்தியைக் காட்டுவதாக இருக்கிறதே யொழிய, அறிவின் தெளிவைக் காட்டவில்லை! பக்தி, அறிவுக்கண்ணை மறைப்பது மட்டுமல்லாமல், உண்மை நிலையையும் உணரவொட்டாமல் தோழர் ரமேஸ்வரன் போன்றோரைத் தடுத்து நிறுத்தவும் செய்கிறது.

அரசாங்கச் சிப்பந்திகளுக்குக் கதரை உடையாகக் கொடுத்த போது, அவர்கள், கதரின் பயனற்றத்தன்மைகளை முன்பொருமுறை விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். இருந்தும் கதரைத்தான் அவர்கள் உடையாகக் கொள்ள வேண்டும் என்று அவர்களை வற்புறுத்தி வருகிறார்கள் ஆளவந்தார்கள்.

தோழர் ராஜகான் பேசும் போது கதர் ஒரு வளர்ச்சியுள்ள தொழிலல்ல, அரசாங்கப் பணம் செலவழிப்பது வீண் விரயம் என்று எடுத்துக் காட்டியபோதுதான், மந்திரியார் மேற்குறித்தவாறு "கதரின் பெருமையந்தாதி" பாடியுள்ளார்.

மந்திரியார் மேலும் கூறும் போது, கதரை விலை போகச் செய்ய, அரசாங்க இலாக்காக்களில் அதிகமான அளவுக்கு அதனைப்புகுத்தவும், குடிசைத் தொழில் மட்டும் வளர்க்கும் பகுதிகளில் வேறு துணிவகைகள் வரவொட்டாமல் தடுத்துக் கதரை மட்டும் இறக்குமதி செய்யவும், சென்னையிலும் மற்ற இடங்களிலும் கடைகள் வைத்து விற்பனை செய்யவும், மில்துணியை வெறுக்கச் சொல்லி, கதர்த்துணியைக் கட்டும்படி மக்களுக்கு அறிவுரைப் பிரசாரம் நடைபெறும்படி செய்யவும் திட்டம் போட்டிருப்பதாகக் கூறியுள்ளார்.

கதர் உற்பத்திக்கு ஏராளமான செலவு-அதனைத் தேக்கி வைத்திருக்கச் செலவு-அதனை விற்பனை செய்யச் செலவு-இப்படியாகப் பல கோடி ரூபாய்களை வாரி இறைக்க முனைந்துள்ளது காங்கிரஸ் அரசாங்கம். மக்களின் நேரத்தையும், உழைப்பையும், பொதுப்பணத்தையும் கொள்ளைகொள்ளும் கதருக்கு—நீண்டநாள்கள் உண்மையிலேயே உழைக்காத கதருக்கு—விலை அதிகமாக உள்ள கதருக்கு—காடு முரடான கதருக்கு—அழகு தராத கதருக்கு ஏன் மக்களின் வரிப் பணத்தைப் பாழாக்க வேண்டும்? காங்கிரஸ்காரர்கள் அறியாமையால் கொண்டிருக்கும் 'கதர் மூட பக்திக்கு' நாட்டு மக்களின் பொதுப்பணம் பலியிடப்பட வேண்டுமா? இது மக்களாட்சியின் மாண்பாகுமா? நீதி பதிலிறுக்கட்டும்!

கதருக்குச் செலவழிக்கப்படும் பணம் **விழலுக்கிறைக்கும் நீர்!** இதை என்று அரசாங்கம் உணரப்போகிறதோ?

"மாணவர்களையே கேட்டுப்பாருங்கள்"!

அண்ணாமலைப் பல்கலைக் கழக அண்மைய நிகழ்ச்சிகள் பற்றி 22-ந் தேதியன்று சென்னைசட்ட சபையில் கேள்விகள் எழுந்தன. கேள்வி யொன்றுக்குப் பதிலளித்த மந்திரி தோழர் மாதவமேனன், 'பல்கலைக் கழகக் கண்டார் நாள்' அன்று என்ஜினியரிங், டெக்னலஜி பகுதி மாணவர்கள் நடந்துகொண்ட போக்கை யொட்டித்தான் பல்கலைக் கழகம் மூடப்பட வேண்டியதாயிற்றென்றும், சர்க்கார் நிலைமையைக் கவனித்து வருகிறார்களென்றும் குறிப்பிட்டார்.

மகளிர்கள் உணவு விடுதியினின்றும் மாணவர் உணவு விடுதியைப் பிரிக்குத் தடுக்கும் சுவற்றை அகற்ற வேண்டுமென்பது தானே மாணவர்களின் கோரிக்கையென்றும், அப்படியானல் அவர்களது அத்தகைய கோரிக்கையின் உட்கிடக்கை யென்னவென்றும் தோழர் பரமானந்த ரெட்டி கேட்டார்.

இதற்குப் பதிலளித்த மந்திரி பிரிக்கும் சுவரை அகற்ற வேண்டுமென்பது தான் மாணவர்களின் கோரிக்கையென்றும், அவர்களின் கோரிக்கைக்கான உட்கிடக்கை என்னவென்பதை அம் மாணவர்களை யேதான் கேட்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

துப்பாக்கிக் குண்டால் தொலைக்க முடியாது கம்யூனிஸத்தை!

—————:0:—————

பேதமற்ற சமுதாயம் மலர வழி செய்யவேண்டும்

அரசியலமைப்பு சபையில் தோழர் சஹாய்

இந்தியாவின் புதிய அரசியல் மூன்றுவது வாதிப்பின் ஐந்தாவது நாள் வாதத்தின்போது பீகார் உறுப்பினர் தோழர் ஜதுபான்ஸ் சஹாய் குறிப்பிட்டதாவது:

'ஒரு நாட்டின் அரசியலை அச்சாகியிருக்கும் எழுத்துக்களைக் கொண்டு நிணயித்துவிடக் கூடாது. அதனையேற்று நடத்தும் மக்கள் தன்மையினையே அது பொறுத்திருக்கிறது.

'பொருளாதார ஜனநாயகத்துக்கு'ப் புதிய அரசியலில் இடமேதரப்படவில்லை. நீண்ட நாள் போராட்டத்திற்குப்பின், நாம் இப்போது அடையப் பெற்றிருப்பது அரசியல்சுதந்திரமேயாகும். பொருளாதாரப் பிரச்னைகள் எடுபடாமலே இருந்து வருகின்றன. 'சமுதாயத்தின் பழைய பொருளாதார அமைப்புதான்' அப்படியே நிலைபெறச் செய்யப்பட்டிருக்கிறது அரசியலில்.

"பொருளாதாரம் சீர்கேடுற்ற நிலையில்தான் கம்யூனிஸம் வளர்ந்து, தழைந்து, பரவ வய்ப்பேற்படுகிறது. துப்பாக்கிக் குண்டுகளாலோ இராணுவ, போலீஸ் படைகளாலோ கம்யூனிஸத்தை தகர்த்து விட முடியாது. இன்றைய பொருளாதார அமைப்பை மாற்றி, வர்க்க பேதமற்ற சமுதாயமொன்றை நிறுவுவதால் மட்டுமே கம்யூனிஸத்தைத் தடுத்து நிறுத்த இயலும்.

"சுகபோக சுபலக் கும்பல் அப்படியேவிட்டுவைக்கப் பட்டிருக்கிறது. நம்மையெதிர் நோக்கி நிற்கும் பொருளாதாரப் பிரச்னைகளைச் சமாளித்து ஆவன செய்யாமல் அஞ்சி யொதுங்கி விடுவோமானல், வேறு சிலர் வந்து அவற்றைத் தீர்க்கத் தான் முந்துறுவர்.'

"யோசிக்கிறோம் முடிவு செய்யவில்லை!"

பாகிஸ்தான் பிரதமர் தோழர் லியாகத் அலிகானை அடுத்தாண்டில் அமெரிக்காவுக்கு வருகை தருமாறு தலைவர் ட்ருமன் அழைத்துள்ளாரென்று வெளியாகியுள்ள செய்தி தவறுனதென்று அமெரிக்க சர்க்கார் இலாகா அதிகாரி நவம்பர் 21-ல் குறிப்பிட்டார். ஒருமுறை அழைக்கலாமாவென யோசித்து வருகிறோமே தவிர, இன்னும் முடிவு செய்யவில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவில் அணுசக்தி ஆராய்ச்சி

அணுசக்தி ஆராய்ச்சி பரிசோதனை இந்தியாவில் இன்னும் ஓராண்டு காலத்தில் அமைக்கப்படுமென்ற தகவலை, காசி இந்து பல்கலைக் கழக மாணவர் கூட்டத்தில் பேசிய டாக்டர் சாந்தி ஸ்வரூப் பாட்னகர் வெளியிட்டார். இதற்கென இட மொன்றை இந்திய சர்க்காரால் நியமிக்கப்பெற்றிருக்கும் பிரெஞ்சு வல்லுநரொருவர் பரிசிலனை செய்து வருகிறாரென்றும் அவர் தெரிவித்தார். பண்டித நேரு இத்திட்டத்தில் மிகவும் கவனங்கொண்டிருக்கிறாரென்றும் கூறினார்.

பழைய கள்ளை புதிய மொந்தையிலாவது ஊற்றக்கூடாதா?

சமுதாயத்தில் முதலாளித்துவ அமைப்பு நிலை பெறுகிறதே!

அரசியலமைத்தார்மீது தோழர் ஜெயின் சீற்றம்!

இந்திய அரசியலமைப்பு சபையில் புதிய அரசியலின் மீது கடந்த 22-ந் தேதி பண்டிட் தோழர் ஜெயின் பேசியதாவது: அரசியல் முறையிலும் பொருளாதார முறையிலும் சரி, இந்தியாவின் புதிய அரசியல், பாராட்டக்கூடியதொன்றல்ல. 1935-ஆண்டின் இந்திய சர்க்கார் ஆக்டைப்பொத்தே அனைத்து அச்சும் காணப்படுகின்றன. 'புதிய மொந்தையில் பழைய கள்' என்ற உண்மையில் கூட அரசியல் வகுக்கப்பெறவில்லை. 'பழைய மொந்தையில் பழைய கள்' என்ற பான்மையிலேயே வகுக்கப்பட்டிருக்கிறது. பழைய சொற்றொடர் அமைப்புகள், சட்டங்கள், விபந்தனை இன்னபிற அப்படியே எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கின்றன. சமுதாயத்தின் முதலாளித்துவ அமைப்பு அப்படியே வைத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது."

பச்சிலைகள் சாகுபடி

இந்திய விவசாய ஆராய்ச்சிக் குழுவின் மருத்துவ செடிகொடிகள் (பச்சிலை) கமிட்டி தனது அண்மைய கூட்டமொன்றில் இந்திய சர்க்காருக்கு சிற்சில சிபார்சு செய்துள்ளது. முக்கியமான பச்சிலைகளை இந்தியாவில் வியாபார முறையில் பயிரிட்டு வளர்க்க வழிவகை செய்யவேண்டுமென மேற்படி கமிட்டி குறிப்பிட்டுள்ளது. 50 பச்சிலைகள் கொண்ட பட்டியலொன்றைத் தயாரித்துக் கொடுத்து, அவற்றை முதலில் பரீட்சார்த்தமாக இந்தியாவின் பல்வேறிடங்களில் பயிரிட்டுப் பார்க்கவேண்டுமெனத் தெரிவித்துள்ளது.

மேனாட்டுக் கல்வியால் மேன்மை கெட்டுவிட்டதாம்!

ஆத்மீகம் பறிபோயிற்றே என்ற அலறல்

விஞ்ஞானிகாட்டும் அஞ்ஞானப்பாதை!

…று ஆண்டுகள் மேற்கத்… கல்வி கற்றதன் மூலம் ஆத்மீகம், அறிவு, …லாச்சாரம் ஆகிய துறை…யில் அன்னியர் நம்மை வென்று விட்டனர். இந்… துறைகளில் இன்னு…ம் நாம் சுதந்திரம் பெற…வில்லை''

…ன்று ராஜபுதன சர்வகலா… இரண்டாவது பட்ட…ளிப்பு விழாவில், சர். ஸி. வி. …மன் பேசியிருக்கிறார்.

…று ஆண்டுகள் மேனாட்டுக் …ி கற்றதன் விளைவாய் இந்தி…ன் ஆத்மீகம், அறிவு, கலை… முதலியன பறிபோய்விட்…டவு, அதனால் இந்தியாவுக்…ம் ஏதோ பெருத்த நஷ்ட…ந்துவிட்டது போலும் …கிறார் அந்த விஞ்ஞானி. …ய பேச்சை யாரேனும் …ஞ்சாங்கப் புரோகிதர் …யிருந்தால், அதுபற்றி நாம் …ப்படமாட்டோம். பேசிய… நோபல் பரிசு பெற்ற ஒரு …ஞானி என்பதை உணரும் … தான் வருந்தாமலிருக்க …வில்லை. அன்னியரால் ஆத்…கம் பறிபோயிற்றே என்று …ம் இவரை, இந்தியா …த்மார்த்தம் இந்தியாவிற் …செய்த நன்மை யென்ன? …ட்டுக் கல்வியால் இந்திய …விளைந்த நஷ்டமென்ன? …கேட்கிறோம். நான்வரு…ணாயிர சாதி என்ற நிலை… துறையிலே; கை…, தக்ளி, கதர் என்பன …முறைகளால் இங்கொட்…த்தொழில் ஒரு நூற்…ப் பின்னால் சென்ற …தொழில் துறையிலே; …ஜனை, ராம்தடாக் …தலைவர் படங்களுக்குக் …ஆராதனை, அரசியல் தலை…க்கட்டிடங்களாக்கி ஆலய…பாடியிற்றுவதை போன்ற …அரசியல் துறையிலே; கீழ்…லோகம், மேலேழுலோகம் … ஆதாரங்களாகப் புராண …காசங்கள் என்ற நிலை… அறிவுத் துறையிலே; இவை…யும் நம்பி நம்பி தன் …இழந்த காரணத்தால், …உணவும், உடுக்க உடை… …க்க இடமும் அற்று …அவதிப்படும் நிலை பொரு…த் துறையிலே என்ற …துறைகளிலும் இந்நாடு …த்த் தவிர, தோழர் இரா… சொல்வதுபோல் இந்திய …ரமும் ஆத்மிகமும் தந்த …யான பலன்தான்

…ல், எந்தக் கல்வியை, …நாகரிகத்தை, எந்தக் கலை …த தோழர் இராமன் …தது என்று வெறுத் …கிறாரோ அதே கல்வி … இன்னபிறவும் தான் …ய இனம் தோழர் இரா…ஞ்ஞானியாக விளங்கச் செய்திருக்கிறது. ஏன், அவர்மட்டுமென்ன, அரசியல், பொருளாதாரம் முதலிய எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும், அவற்றிலெல்லாம், அறிவும் ஆற்றலும் பெற்று விளங்கும் தலைவர்கள் அத்தனை பேரையும் மேதைகளாக்கியது, அதே, மேனாட்டுக் கல்விதான் என்பதை யார்தான் மறுக்க இயலும்?

எனவே, தோழர் இராமனின் பேச்சு காலத்துக்கும் கருத்துக்கும் ஒவ்வாத பேச்சு. இத்தகைய பேச்சு பேசுவது இவரது இயல்பு போலும். இதற்கு முன் ஒரு தடவை வைரத்தைக் கொண்டு மையல் பத்திரங்கள் தயார்செய்யலாம் என்று இதே அறிஞர் கூறியிருப்பதை வாசகர்களுக்கு நினைவூட்டுகிறோம்.

ஒரு விஞ்ஞானியாக இருந்துகொண்டு, அடிக்கடி இங்ஙனம் பழமைக்கும் புதுமைக்கும் இடையே பாலம் போடும் வீண் வேலையில் ஈடுபடுவது கண்டு வருந்தாமலிருக்க முடியவில்லை. மேனாட்டுக் கல்வியால் ஆத்மீகம் பறிபோகிறதே என்று பரிதவிக்கும் இவரும், இவரது குழுவினரும்தான் மேனாட்டுக்கல்வியால் பயன் அடைந்தவர்கள்! இவர் போன்றோர் பேச்சைக் கேட்டு ஆத்மீகத்தை நம்பி அவதிப்படுவோர் திராவிட மக்கள்தாம்.

ஆகவே, தோழர் சர். சி.வி. இராமன் போன்றவர்களின் பேச்சு திராவிடமக்களை மேலும் மேலும் பிற்போக்குடையச் செய்யுமேயல்லாது, முன்னேற்றத்துக்கு வழி காட்ட வல்லதல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

நாஞ்சில் மாவட்டத் தோழர்களுக்கு வேண்டுகோள்

தோழர்களே,

நாஞ்சில் மாவட்டத்தில் கிராமங்களிலும் நகரங்களிலும், கிளைக் கழகங்கள் நிறுவி, அதனுடைய நிர்வாகிகள் பெயர்களைப் பதிவு செய்து, எனக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

நாஞ்சில் மாவட்டம் புதிதாக அமைக்கப்பட்டிருப்பதால் இங்குள்ள தோழர்கள் உணர்ச்சியோடு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அங்கத்தினர்கள் சேர்க்கும் பணியில், முனைந்திருக்கும்படியால் கிளைக் கழகச் செயலாளர்களையும் அமைப்பாளர்களையும் வேண்டுகிறேன்.

மத்திய தி. மு. க. பொதுச் செயலாளர் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் டிசம்பர் மாத இறுதியில் தொடங்கி ஒவ்வொரு மாவட்டமாக சுற்றுப்பிரயாணம் செய்வார்கள். ஆதலால் நமது மாவட்டத்திற்கும் அவர்கள் வருவதற்கு முன்னால் இயன்ற அளவு கிளைக் கழகங்கள் நிறுவி குறைந்தது 10,000 உறுப்பினர்களாவது சேர்க்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்.

ரசீது புத்தகங்கள் வேண்டும் கிளைக் கழகச் செயலாளர்களும் அமைப்பாளர்களும் என்னுடைய முகவரிக்கு எழுதினால் அனுப்பிக் கொடுக்கப்படும். மாவட்டக் கழகத்திற்கு அனுப்பவேண்டிய ரசீதை, கீழ்கண்ட என் முகவரிக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

வி. எம். ஜான்
அமைப்புக்குழு உறுப்பினர்,
நாஞ்சில் மாவட்டம்
நா. தி. மு. கழகம் நாகர்கோவில்.

'ஹிட்லரிஸத்தைப்பெற்றெடுத்த ஜெர்மன் அரசியல் இதற்கு நிகர்'

இந்தியாவின் புதிய அரசியலில் பாஸிஸ வித்துக்கள்

அரசியலமைப்பு சபையில் நேற்று பேசிய உறுப்பினர்கள் பலரும், புதிய அரசியலின் கீழ் மத்திய சர்க்காரில் அளவுக்கு மீறிய அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருக்கின்றனவென்றும், தலைவரிடம் அபரிமிதமான அதிகாரம் சமர்ப்பிக்கப் பெற்றிருக்கின்றதென்றும் புகார் செய்தனர். காங்கிரஸ் காரியதரிசி சங்கர்ராவ்தேவ், சர்தார்போபிந்தர் சிங்மான், கமலிசையது, கரிமுதீன், தோழர் அருண் சந்திரகுகா, நகல் கமிட்டி உறுப்பினர் சாமகமது சாதுல்லா ஆகியோர் யாவரும் அரசியலின் இந்த அம்சத்தை வெகுவாகக் கண்டித்துப் பேசினர்.

ஜெர்மெனியின் வேமெர் அரசியலிலும் தலைவர் முழுக்க முழுக்க ஒரு சர்வாதிகாரி ஆய்விடுவதற்கான அம்சங்கள் காணப்படுகின்றன." என்று தோழர் சங்கர்ராவ்தேவ் குறிப்பிட்டார்.

தோழர் மாபூப்அலி பெய்க் (சென்னை) பேசுகையில் புதிய அரசியல் 'மிக மிக பிற்போக்கானதும் ஏமாற்றந்தருவதுமாகக் காட்சியளிக்கிறது' என்று தெரிவித்தார். பொதுமக்களின் சிவில் உரிமைகள் மீதெல்லாம் தடைவிதிப்பது பொருத்தமும் நியாயமுமற்றதாகுமென்று தோழர் பெய்க் குறிப்பிட்டு, இது 'பாஸிஸத்துக்கும், யதேச்சாதிகாரத்துக்கும், சர்வாதிகாரத்துக்கும் தான்' அடிகோலுமென எச்சரித்தார்.

மக்கள் விழிப்புடனிருந்து, இவ்வரசியலை மாற்றவோ, அல்லது யதேச்சாதிகாரமாய் நடந்துகொள்ளும் சர்க்காரை மாற்றவோ முயலுவரென்று தான் நம்புவதாகவும் குறிப்பிட்டார்.

தோழர் பி. டி. சாக்கோ (திருவாங்கூர்-கொச்சி) பேசுகையில், மத்தியபார்லிமெண்டுக்கும் நிர்வாகத்துக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் விசேஷமான அதிகாரங்கள், ஹிட்லரிஸத்தைப் பெற்றெடுத்த ஜெர்மன் அரசியல் சட்டத்திலுள்ளவைகளை யொத்தே காணப்படுகின்றன வென்று குறிப்பிட்டார்.

திராவிட முன்னேற்றக் கழகங்கள்

கும்பகோணம்—நகரக்கிளை

கும்பகோணம், நவ. 21—

இந்நகர் தி. மு. க. அமைப்புக் கூட்டம், பஞ்சகாரத்தெரு, பெரியார் மாளிகையில் 20—11—49 மாலை 5 மணிக்கு நடைபெற்றது. தோழர் கே. கே. நீலமேகம் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். அதுபோது "திராவிட முன்னேற்றக் கழகம்-கும்பகோணம் நகரக் கிளை" நிறுவப்பட்டது.

பின்பு, கீழ்க்கண்ட செயற்குழுவினர்கள், தோழர் வி. பராங்குசம் அவர்களால் முன்மொழியப்பட்டு, தோழர் கே. மோகனானந்தம் அவர்களால் வழி மொழியப்பட்டு ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:— கே. கே. நீலமேகம்; துணைச் செயலாளர்:— வி. சின்னத்தம்பி; பொருள் உறுப்பினர்:— எஸ். எஸ். கோவிந்தசாமி; விளம்பர உறுப்பினர்: எஸ். கே. சாமி.

ஏனைய செயற்குழுவினர்:- என். ரெங்கநாதன், எஸ். பெரியசாமி, பி. எ. துரைராஜ், ஏ. வி. எஸ். வெங்கடராமானுஜம், கே. மோகனானந்தம், ஏ. ராஜூ; வி. கோவிந்தராசு, கே. கலியபெருமாள், எஸ். ஆர். பாலகிருஷ்ணன், எஸ். சிராமுலு, ஏ. சிங்காரவேலு, சு. ப. நாதன், ஆர். பெருமாள், வி. பாரங்குசம், எம். ராசமாணிக்கம். பின்னர் கீழ்க்கண்ட தீர்மானம் தோழர் கே. மோகனானந்தம் அவர்களால் கொண்டுவரப்பட்டு, தோழர் ஏ. வி. எஸ். வெங்கடராமானுஜம் அவர்களால் வழிமொழியப்பட்டு முழுமனதுடன் நிறைவேறிற்று.

தீர்மானம்:— 4-12-49 அன்று மாலை 5-மணிக்கு, டாக்டர் டி. எம். நாயர் ஞாபகார்த்தக் கட்டடத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் திறப்புவிழாவும், கொடியேற்று விழாவும் நடத்துவது. அன்று மாலை 5-30 மணிக்கு காங்கேயன் சாந்தி பார்க்கில் அவ்விழாப் பொதுக்கூட்டம் தோழர்கள் சி. என். அண்ணாதுரை, ஈ. வி. கே. சம்பத், பெத்தாம்பாளையம் பழனிச்சாமி ஆகியோரைக்கொண்டு நடத்துவது. பின்பு தோழர் சு. ப. நாதன் நன்றி கூறக் கூட்டம் முடிவுற்றது. (செ-ர்)

* * *

காவேரிப்பாக்கம்—சிற்றூர்க் கிளை

காவேரிப்பாக்கம், (இராணிப்பேட்டை) நவ. 20—

இவ்வூர் திராவிடர் கழகச் செயற்குழுக் கூட்டம் 15-11-49 அன்று தோழர் சி. இராதாகிருட்டிணன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, பெரியார் அவர்களின் போக்கு காரணமாக, இதுவரை திராவிடர் கழகமாக இருந்ததை, "திராவிட முன்னேற்றக் கழகம்—காவேரிப்பாக்கம் நகரக்கிளை" என மாற்றியமைக்கப்பட்டது. பின்பு கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்— சி. இராதாகிருட்டிணன்; துணைச்செயலாளர்— மு. கண்ணப்பன்; பொருள் உறுப்பினர்— இரா. மணிஎழிலன்; ஏனைய செயற்குழுவினர்— கி. கேசவன், பலராமன், வே. கணேசன், கா. ரா. குப்பண்ணு, மு. ரங்கநாதன், எம். கவுஸ். பின்பு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. (வி. உ)

* * *

பண்ணுருட்டி—நகரக்கிளை

பண்ணுருட்டி, நவ. 16—

13—11—49 அன்று தோழர் ச. சே. முருகதாரமானுஜம் அவர்கள் இல்லத்தில், தோழர் ப. மாணிக்கவேல் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில்; "திராவிட முன்னேற்றக் கழகம்—பண்ணுருட்டி நகரக் கிளை" நிறுவப்பட்டுக் கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்— ச. குமாரசாமி; துணைச்செயலாளர்— ச. கோவிந்தன்; பொருள் உறுப்பினர்:—வே. கிருட்டிணராசு; விளம்பர உறுப்பினர்:— மு. குட்டியப்பன்.

ஏனைய செயற்குழுவினர்: ப. மாணிக்கவேல், வே. அங்கப்பன், ந. இராசகோபால், கி. எ. அப்துல் கனி, டி. கோவிந்தராசுலு, ஜி. என். அரங்கநாதன். பின்பு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. (வி-உ)

* * *

மேட்டுப்பாளையம்—சிற்றூர்க்கிளை

மேட்டுப்பாளையம், (திருச்சி) நவ. 22—

21-11-49 அன்று, தோழர் ப. வை. சந்தியப்பன் அவர்கள் இல்லத்தில், தோழர் நா. ராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், "திராவிட முன்னேற்றக் கழகம்—மேட்டுப்பாளையம் சிற்றூர்க் கிளை" நிறுவப்பட்டது. கீழ்க்கண்ட புதிய செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:— மா. தங்கராசு, துணைச் செயலாளர்-ப. வை. சந்தியப்பன், பொருள் உறுப்பினர் கி. முத்துசாமி, விளம்பர உறுப்பினர்-பெ. அ. இராசு. ஏனைய செயலுறுப்பினர்கள்-வெ. சீனிவாசன், ல. கு. அனந்தகிருஷ்ணன், ரா. இராமலிங்கம், ம. நடேசன், ர. ஜெகன்னாதன், ல. ர. வரதராசன், மா. ராமனாதன். (வி. உ.)

* * *

இடைப்பாடி—சிற்றூர்க்கிளை

இடைப்பாடி, நவ. 23—

இவ்வூர் திராவிடர் கழக உறுப்பினர்களின் கூட்டமொன்று, 20—11—49 அன்று தோழர் இரா. தாண்டவன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, "திராவிட முன்னேற்றக் கழகம்—இடைப்பாடி சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டது. பின் கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர்—மு. இராசு, துணைச் செயலாளர்-இரா. தாண்டவன், விளம்பர உறுப்பினர்—நா. அருணாசலம். ஏனைய செயலுறுப்பினர்கள்—பி. பண்டரிநாதன், வி. பொன்னுசாமி, மு. நாராயணன், சா. ராமசாமி, என். நடேசன், எ. மெய்வேல், எம். அருணகிரி, கே. கந்தன், எஸ். பழனியப்பன், ஆ. வேலாயுதம், சே. மாரியப்பன், கை. இ. கைலாசமூர்த்தி, எஸ். பூஞ்சரவணம், மு. தாண்டவன் எ. அர்த்தநாரி, ஆர். வி. பெருமாள், எ. கே. பழனிச்சாமி. (வி. உ.)

ஆந்திர மாகாணப் பிரிவினை அமுல்

ஆந்திர மாகாணத்தை விரைவில் நிறுவித்தர இந்திய சர்க்கார் சம்மதித்து விட்டனராம். தமிழ்நாடு, ஆந்திரம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கொண்ட கமிட்டியொன்றை இந்திய சர்க்கார் [illegible] விரைவில் நிறுவுமென்று தெரிகிறது. பூர்வாங்க வேலைகளை இக்கமிட்டி கவனிக்குமாம். இப்போதைய இந்திய சர்க்கார் ஆக்டின்படிக்கு ஆந்திர மாவட்டங்கள் பிரிக்கப்படுமென்றும் இது 1950 ஜனவரி 26க்குள் முடிவடையுமென்றும் ஏப்ரல் 1-ந் தேதிக்கு முன்பு வரை பொருளாதாரப் பிரிவினைமட்டும் முடிவடையாதென்றும் கூறப்படுகிறது.

மஞ்சள் பெட்டியின் மகத்துவம் இதுதானா?

அயலார் வாழ திராவிடம் சுரண்டப்படுவதா?

செயங்கொண்டானில் தோழர்கள் என். வி. நடராசன், சிற்றரசு முழக்கம்

செயங்கொண்டான், இவ்வூர் தி. மு. க. துவக்க விழா 18-11-49-ந் தேதி துவக்கப்பட்டது. 18-11-49-ந் தேதி 4 மணிக்கு சி. பி. சிற்றரசு, என். வி. நடராசன் முதலியோர் "அறிவு நிலையம்" இலவச வாசகசாலையினர் அழைப்பிற்கிணங்கி, சென்று பார்வையிட்டு, தங்கள் பாராட்டுதலை தெரிவித்தனர். அவர்களால் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டது. உடனே, அங்கிருந்து ஊர்வலமாக கிளம்பி சி. பி. சிற்றரசுவால் கடை வீதியில் தி. மு. க. இருவண்ணக்கொடி ஏற்றப்பட்டது. வீதிகள் எல்லாம் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. நடுப்பகல் வரையில நல்ல மழை இருந்தும் வெள்ளம் போல கூட்டம் காத்திருந்து பார்க்கை வந்தடைந்து விழாவைச் சிறப்பித்து கொடுத்தது குறிப்பிடத் தக்கது.

தோழர்கள் ராமதாஸ், சுந்தரம் முதலியோர் இன்னிசை பாடினர். செயலாளர் வை. ராசகோபால் முன்மொழிய விளம்பர உறுப்பினர் சே. எஸ். காசிம் வழிமொழிய நீண்ட கைத்தட்டலுக்கிடையே தோழர் எம். வேணு கோபால் தலைமை தாங்கினர்.

தலைவர் தம் முன்னுரையில் "இரண்டு மூன்று மாதங்களாக தலைவர் திருமணத்தால் கூட்டங்கள் பாதிக்கப்பட்டிருந்தது. இன்று திராவிட முன்னேற்றக் கழகத் துவக்கவிழா கொண்டாடப்படுகிறது. திராவிடர் கழக திட்டங்களே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும்" என்று கூறினர்.

என். வி. நடராசன்

அடுத்து என். வி. நடராசன் நீண்ட கைதட்டலுக்கிடையே பேச ஆரம்பித்தார், அதன் சுருக்கம் கீழே:—

இன்று திராவிட முன்னேற்றக் கழக துவக்கவிழா. இதுவரையில் திராவிடர் கழகம் எந்த முறையில் பணியாற்றியதோ அதைப்போல, அதே கொள்கையில தி. மு. க. முன்னேற்றக் கருத்துடன் தொண்டாற்றும். கடந்த முப்பது ஆண்டுகளாக சுயமரியாதை கட்சி—சமதர்மக் கட்சி—ஜஸ்டிஸ் கட்சி—திராவிடர் கழகம் ஆகியவைகள் சொன்னதையே திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லும். நமக்கு சுதந்தரம் கிடைத்து 2 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. இன்று கிடைத்துள்ள சுதந்திரம் ஏழை எளியவர்க்கல்ல, ஒரு கூட்டத்திற்குத்தான். நாங்கள் கட்சி-பிரதி கட்சி என்ற முறையில் கூறுகிறோம், எனது மதிப்பிற்குரிய காங்கிரஸ் தோழர்களே சிந்தித்துப் பார்க்கட்டும்; 1947-க்கு பிறகு என்ன சாதிக்கப்பட்டிருக்கிறது என்று எந்தக் கொள்கைக்காக சுதந்திரத்திற்காக குண்டாந்தடி அடி பெற்றார்களோ—துப்பாக்கி குண்டுகளுக்கு இரையானார்களோ—உடல் பொருள் ஆவி போராட்டத்திற்காக கொடுக்கப்பட்டதோ அந்தச் சுதந்திரமா இது? எந்தக் கொள்கைக்காக கப்பலோட்டிய தமிழன் சிதம்பரம்பிள்ளை செக்கிழுத்தாரோ—திருப்பூர் குமரன் குண்டாந்தடிக்கு இரையானாரோ—பகவத்சிங் தூக்கு மேடையில் ஏற்றப்பட்டாரோ—தமிழ் மொழியைக் காத்து, வீணர் மொழியை வீழ்த்த தாளமுத்து—நடராசனும், கொண்ட கொள்கைக்காக வேலாயுதம் தியாகம் செய்தனரோ அது வெற்றிபெற்றதாகக் கூற முடியாது என்றும் அன்றைய வெள்ளையர் ஆட்சியைப்பற்றியும் இன்றைய காங்கிரசு ஆட்சியைப் பற்றியும் குறிப்பிட்டார்.

சொல்வேறு செயல்வேறு ஏன்?

மேலும் பேசுகையில், 'இன்று எதிர்த்து கேட்டால் சிறையில் அடைப்பேன், 144 போடுவேன்; சுட்டுத் தள்ளு, நாடகத்திற்குத் தடை போடு; புத்தகத்தைப் பறிமுதல் செய் என்கிறீரே ஏன் இந்த நிலைமை வரவேண்டும்? இதற்காகவா அவர்கள் தியாகம் செய்தனர், உயிரை பலியிட்டனர் என்று கேட்டார். சோஷலிஸ்ட்—கம்யூனிஸ்ட்—திராவிடர் கழகம் எதாக இருந்தாலும் சொல்வேருக வும், செயலவேருகவும் இருக்கக்கூடாது என்று நாங்கள் கூறுகிறோம்.

மஞ்சள் பெட்டியின் மகத்துவமா?

நம் நாட்டுப்பணம் ஊதாரித்தனமாகச் செலவு செய்யப்படுகிறது நேற்றையதினம் அமெரிக்காவில் ஜவகர்லால் நேரு உல்லாசப்பயணம் செய்தார். வரவேற்பு தரப்படுகிறது. 'மகிழ்ச்சி' வரவேற்பைக் கண்டு, ஆனால் நிலைமை? அமெரிக்க நாட்டிற்கு—முதலாளிவர்க்கத்திற்கு அடிமையாக்கப்போகிறார். இன்று எவ்வளவு கொழுத்த சம்பளம் ஒவ்வொருவரும் வாங்குகின்றனர். மேஜை, நாற்காலி வாங்க லட்சக்கணக்கில் இந்த நாட்டுப் பணம் செலவு செய்யப்படவேண்டும். விஜயலட்சுமி குளிக்கும் அறைக்கு ஒரு லட்சம். யாருடைய பணம்? பொதுமக்கள் பணம். வெள்ளையர் காலத்தில ஏன் அதிகச் சம்பளம் வாங்குகிறாய்? எங்கள் நாட்டுப் பணத்தை ஏன கொள்ளை அடிக்கிறாய் என்று ஓயாது கண்டித்தோம்—ஏழு

கிறோம் — 'ஒழிக வெள்ளை ஏகாதிபத்தியம்' என்றோம். ஏன் இவ்வளவு சம்பளம் என்றாய் நீயும்! அவர்களைவிடக் கொள்ளைக்காரனாக இருக்கிறாயே. தொழிலாளி சம்பளம் பத்தனை போதாது என்றால் தடியால் அடிக்கிறாய் சிறையில் அடைக்கிறாய் நீ மட்டும் ஏன் இவ்வளவு வாங்குகிறாய். அன்று நாங்கள் போனால் மக்கள் மன்னராவர் என்றீர்கள். மஞ்சள் பெட்டியில் ஓட்டு போட்டால் எல்லாம் முடியுமென்றீர்கள்.

சுதந்தர ஆட்சி இதுதானா?

அடுத்துள்ள சேலம் ஜில்லாவில் கைத்தொழிலாளர்கள் கஷ்டத்தை ஏன் என்று கேட்பாரில்லை. அகதிகளுக்கு மட்டும் இங்கே சாப்பாடு. நம் நாட்டில் பிறந்ததோழன்—ஓட்டுபோட்ட தோழன், மற்றொரு இடத்தில் பிச்சை எடுக்கிறான் இதற்குத்தான் சுதந்திர ஆட்சி என்றுபெயரா? சட்டசபை உறுப்பினர் சம்பளம் 150 ரூ. டிக்கட் இலவசம், 1 நாள் சாப்பாட்டிற்கு ரூ 7—8—0! இது போகாது என்று, 1 நாளைக்கு ரூ. 12-8-0 வேண்டுமென்று மாற்றினீர்களே, சம்பளம் ரூ. 150 இல்லாமல். அதே நேரத்தில் தொழிலாளி கேட்டால் தடியடியா? கேட்கமாட்டானா தொழிலாளி.

என்னருமை காங்கிரஸ் தோழர்களைக் கேட்கிறேன். சட்டசபையில் என்ன செய்கின்றனர். ஒருவர் தூங்கலாமா என்கிறார், ஆரஞ்சுபழம் தின்னலாமா? என்கிறார் ஒருவர். தூங்கலாமா, குறட்டை விடலாமா? என்கிறார். இப்படியா? கூத்தடிக்கின்றீர்களே! எந்த ஊரில் கால்வாய்வேண்டும், பள்ளிக்கூடம்திறக்கவேண்டும், ரோடுகள் போடவேண்டும் என்று கேட்கவேண்டாமா? இது இல்லாமல், பள்ளிக்கூடங்களை வேறு மூடப்போகிறீர்களே, இதைச் சொன்னால் தேசத் துரோகமா? குமாரசாமிராஜாவே பிரதம மந்திரியாக இருக்கட்டும்—பக்தவத்சலம் இருக்கட்டும்—காமராஜரே முடிசூடா மன்னனாக இருக்கட்டும். ஆனால் வடநாட்டு அடிமைகளாக இருக்கக்கூடாது. வடநாட்டுக்காரர்களிடம் குமாஸ்தாவாக இருக்கிறார்களே இவர்கள், சுதந்திர ஆட்சியில் இப்படியா?

சிலோன் சுயாட்சியில் அங்கு மிரட்டுகிறான். ஓடுகிறேன் என்றால், உதைவாங்கிக்கொண்டு போ என்கிறான். சில லட்சக்கணக்கான மக்கள் அங்கு. இங்கு 2½ கோடி மக்கள்; தலைவன் குமாரசாமி ராஜா, வடநாட்டுக்குக்காவடி. தோழர்களே! குமாரசாமி ராஜாவே இருந்தாலும சரி, பொருள கொள்ளைபோகக் கூடாது. இங்கு பட்டினியால் வாடக்கூடாது என்று தான் கூறுகிறோம். (சிறு மழை வந்ததும மார்கெட்டிலும கொட்டகைகளிலும் இருந்து சிறப்பிக்கும்படி தலைவர் கேட்டுக்கொண்டார். அதையும் லட்சியம் செய்யாமல், நடராசன் அவர்கள் சொல்மாரியை மக்கள் கேட்டுக்கொண்டு இருந்தனர்.

ஒதுங்கியவரைத் தவிர மற்றவர் நேனட பங்கலிலும் பல நின்றனர். ஒலிபெருக்கிபெரு உபகாரம் செய்தது]

நம்நாட்டுக் கைத்தறியாளர் நிலை

வடநாட்டு கைத்தறித் துணிகள் பளப்பளப்பாக இங்கு குறைந்த விலையில் விற்கப்படுகிறது. அதே நேரத்தில் நம் நாட்டு கைத்தொழில் துணிகள் அதிக விலைக்கு விற்கப்படுகிறது. எப்படித்தொழிலாளி முன்னேற முடியும்? நாடு நம் நாடாக நம் அதிகாரத்திற்கு உட்பட்டு இருந்தால் இதற்கு வசதி செய்யலாம் எனவேதான், நாங்கள் 'திராவிட நாடு திராவிடருக்கே!' 'தமிழ் நாடு தமிழருக்கே, இருக்க வேண்டுமென்கிறோம். செய்ய முடியுமா? என்று கூறலாம். சென்ற இந்தி எதிர்ப்புசமயத்தில் தமிழ் நாடு தமிழருக்கே என்றோம, எலிவளை எலிக்களுக்கே என்று கிண்டல் செய்தனர். இன்று அவர்கள் 12 ஆண்டு கழித்து கூறுகிறார்கள், தமிழ் நாடு தமிழருக்கே என்று. எப்படி எங்கள் இதய கீதம். 1937ல் எதிர்க்கப்பட்டதோ அதே போல 1949ல் வரத்தான் போகிறார்கள், திராவிட நாடு திராவிடருக்கே என்று.

அன்று சொன்னேம்; இன்று செய்கிறார்கள்!

அன்று, ஆதித்திராவிடர்களை கோயிலுக்குள்விட வேண்டுமென்றோம். எதிர்த்தனர் அது இன்று, ஆட்சியாளர்களால் சாதிக்கப்படுகிறது. ஒரு மனிதன் இரண்டு மனைவிகளைத் திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்றோம் எதிர்த்தனர், இன்று ஆட்சியாளரால் சட்டம் கொண்டு வரப்படுகிறது! நாங்கள் கூறுகிறோம். இன்று பார்ப்பனர்களிடம் கொடுத்து, பழமையில் மூழ்கி இருப்பதால் இருக்கிறீர்கள் உணர்ந்தால்எங்களைவிட தீவிரமாக வந்தே தீருவார்கள். ஏழை என்றும் அடிமை என்றும் எவனுமில்லை ஜாதியில்என்றால், பசிப்பிணி இல்லாமல், சுரண்டல் இல்லாமல் இருக்கவேண்டும்.

நாம் வெள்ளையனானலும்சரி அமெரிக்கா, ரஷ்யா, வடநாடு எந்த நாடானாலும்சரி உறவு கொண்டாடுவோம். அன்னியன் வராமல் சண்டை காலத்தில் ஒத்துழைப்போம். ஆனால் நாடு தனியாக பிரிய வேண்டும்.

இல்லை-இல்லை-இல்லை!

உண்மை காங்கிரஸ்காரர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இனி மேலாவது திட்டம் போட்டு வேலைசெய். உழைப்பவனுக்கு உரிமை கொடு. மோட்டார் ஓட்டுபவனுக்கு உரிமை கொடு. இயந்திரம் ஓட்டுவனுக்கு வசதி செய்து தா. மதுவிலக்குக்குப் பிரசாரம் செய்ய ஏன் ஆட்கள்? மந்திரிகள் சம்பளம் வாங்குவது மட்டும் போதாதா? ஆகவேதான், சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்கிறோம். இவைகளைக்கூறத்தான் தி. மு. க. இருக்கிறது

அரை படி அரிசி எடுத்துச் சென்றால் சிறையில். 2 வண்டி அரிசி கொண்டு வருபவன் பேகிறான் கேட்பாரில்லை! இன்று எதை எடுத்தாலும் இல்லை என்று தானே இருக்

...து, சுதந்திரம் வந்த பி...

சர்க்கரை இல்லாவிட்ட... பிறது மிளகாய் இல்லை. ... கா... இல்லாவிட்டால், பி... மிளகு இல்லை. இப்படியா... கனே போய்கொண்... கிறது. ஏன்; இந்த ... என்றால் தடியடி—துப்... முனை.

வாருங்கள், சேருங்கள் ஆதரவு தாருங்கள்!

ஆகவே, அரசியல் துறை... அறிவில் துறையில் ... லில்லாமக்கச் சுபராஜ்யம் ... டும் வடநாட்டு ஆதிக்க... உங்கள் ஆட்சியைக் காப்... றுங்கள், வெள்ளைக்காரனை ... கக்கிளம்பியவர்கள் வட... டுக்கொள்ளைகார கூட்டத்... ஒழிக்க தி. மு. கழகத்தில் சே... கள எங்கள் கூட்டத்திற்... ரவு தாருங்கள் என்... தி. மு. க. அங்கத்தி... சேருங்கள் என்றும்; உல... பாளிக்கு உரிமை வேண்... ...தவெறி ஒழிப்புக்கு ஆ... செய்ய வேண்டும் என... கூறினர்.

சி பி. சிற்றரசு

பிறகு சி. பி. சிற்... பேசியதின் சுருக்கம் ... தரப்படுகிறது;—நம் ந... டிற்குக் கிடைத்தது சுத... மல, 'சு' என்ற எழு... நீக்கிப்பார்த்தால் எது... அந்தத்தந்திரம்தான் சுத... மென்றால் இத்தவிக்கு... திரம் ஸ்பெயினுக்கு நம... டிற்கல்ல சுதந்திரம் ... நாட்டிலே கள்ளமார்க்... நடக்கவில்லை. நடந்... வும் நான் படிக்கவில்லை ... ஆர். தாஸ் ஒரு புத்தக... எழுதியுள்ளார். வேலை... னிடம் முதலாளி பத்தி... வீட்டைப் பார், கொ... கூட்டம் இருக்கிறது ... டிலே என்று கூறி. ஒருவ... வாளும்—ஒரு கையில் ... மும் தந்துவிட்டுச் ... கிறான். கொள்ளைக்கா... டததினர் கொள்ளை அ... சென்றுவிடுகிறார்கள். ... லாளி ஏன் விட்டாய் ... கேட்கிறான். நீங்கள்தா... கையில் கேடயமும்—... யில் வாளும்கொடுத்து... சென்றுவிட்டீர்களே, ... யினால் எந்தக் கையா... டனைப் பிடிப்பது ... விட்டுவிட்டேன் என்... அதைப்போன்று இரு... நம் நாட்டுச் சுதந்திர ... வெள்ளைக்கார ஆட்... விருந்து, அமெரிக்க ந... னுக்கு அடிமையாகப்... கிறது.

பகுத்தறிவுக்குத் தடை புராணத்திற்கு ஆத...

காமராஜர் கூ... "வேறு ஆட்சியானா... சாங்கமானால் கட்டை... வெட்டும் என்று, ... நூலுக்குத் தடை-ப... சன இரணியன் அல்ல... யற்ற வீரன் நாடகத்... தடை உண்மையிலேயா... தத்தைக்கொண்டும் இ... அறிவை—உணர்ச்... அடக்க முடியாது. ... விரலை வெட்டினாலும் ... வா தானே எழுதமுடி...

இந்த நாட்டிலே ... மானத்துக்காக பலி... வேலாயுதத்தை மறக்... டோம் தோழர் வே... தொங்கிய கயிற்றிலே...

[தொடர்ச்சி 6 ம் பக்கம்

வெளிவருகிறது!

"புராக்ரஸ்"

திராவிடர் ஆங்கில வார வெளியீடு

ஆசிரியர்: C. N. அண்ணாத்துரை M.A.,

தனிப் பிரதி அணா 1. — வருடசந்தா ரூ. 3

முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்ட்டுகள் தேவை

விவரங்கட்கு:—

"மாலை மணி" பதிப்பகம்,

சென்னை—1.

மஞ்சள் பெட்டியின்...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

ளுலும் கவலையில்லை. எங்கள் நாடகம்—நூல் இருக்கக் கூடாது என்றும், நாசமாக்கு கிறேன் என்றும் கூறிய நீ என்ன செய்கிருய்? கட்டிய மனைவியை விற்கத் தூண்டும் அரிச்சந்திர புராணத்தையும் 'மாடு தின்னும் புலையா உனக்கு மார்கழி திருநாளா' என்னும் நாடகத்தை ஏன் தடை செய்யவில்லை?

'கொடுத்த பணத்துக்காக மனைவியை விற்றுக் கொடு' என்று வேதியன் கூறும் அரிச்சந்திர நாடகத்தைத் தடை செய்ய வேண்டாமா? ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணியை அனுமதிக்கலாமா?

பேசு, எழுது-எதையும் தடை செய்யாதே!

இன்று 400 பேர் மது ஒழிப்பு பிரசாரத்திற்காம். ஜவுளிக்கடை மூடி இருக்கும் பொழுது ஜவுளி வாங்காதீர்கள் என்ருல், பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குத்தானே அனுப்புவார்கள். 400 பேர் எதற்காக பிரசாரத்திற்கு. பணம் நாசமாகவா?

நாட்டிலே கள்ளமார்க்கெட் தலைவிரித்தாடுகிறது. "ஐயா, சர்க்கரை இருக்கிதா" என்ருல், நீங்களே வந்துட்டீங்களே 4½ ரூபாய் கொடுங்கள்' என்கிருர்கள். எங்கே இருக்கிறது தேசியம்?

நாடு முன்னேற வேண்டுமானல், அரசியல், பொருளாதாரம்-சமுதாயம் முன்னேற வேண்டும். ஜனநாயக முறையில் செய்ய வாருங்கள். காங்கிரஸ்காரர்கள் அத்தனை பேரும் லஞ்சம் வாங்குபவர்—பித்தலாட்டக்காரர்கள் என்று கூறவில்லை. நாங்கள் சொலவது என்னவென்ருல், மேடையில் பேசு, பத்திரிகையில் எழுது. அதைவிடுத்து பத்திரிகையைத் தடைசெய்யாதே. ஜாமீன் கேட்காதே. நீங்கள் சுதந்திரம் தேடித் தந்தால், நாங்கள் பகுத்தறிவு என்னும் பேரால் முதாய அறிவை வளர்க்கிறோம்.

அன்றைய நிலையும் இன்றைய நிலையும்

இன்று பாடசாலை முதல் கொண்டு, ஆசிரியர்களால் பதில் சொல்ல முடிவில்லையே! முன்பு, இரண்டணுவுக்கு மூன்று யானை. 4 அணுவுக்கு எத்தனை யானை என்ருல, வாங்கமுடியாதே என்கிருன். இன்று எம். ஏ. படித்தவன் கூட அதோ கைஞ என்ருல், ஸ்பெயின் என்ருல், ஜெர்மன் நாடு தெரிகிறது என்ருல் நம்பமாட்டேன் என்கிருன். ஆனல், அவனே பந்தலுக்கு மேலே அருந்ததி தெரிகிறது என்கிருன். எதைஎடுத்தாலும் ஆதிசேஷா ஆபத்பாந்தவா! என்கிருன். அவர் படுத்திருப்பது கடல்—மேலே பாம்பு—பக்கத்திலே தேவி. எப்படி உனக்குச் சௌகரியம் செய்ய முடியும்? இன்று பாடசாலைகளில்கூட மாணவர்களால் நம்பமுடியவில்லையே. ஆசிரியர்கள் வெட்கித்தானே பதில் கூறுகிருர்கள். பையன் எதை எடுத்தாலும் சரித்திரத்தில் கி. பி. கி. மு. என்று வருகிறதே ராமாயணத்தில் ஏன்சார் வரவில்லை என்ருல், ஆசிரியர் திகைக்கிருர். பக்கத்து மாணவன் டூப்பு என்கிருன்!

எஸ்-நோ-ஆல்ரைட்!

இன்று பெரிய திட்டங்கள் எல்லாம்தயாரிக்கின்றனர் மந்திரிகள் கல்விகற்கப்பள்ளிக்கு போகாத ஒருவன் பெரிய சிந்தனையாளஞக—சமுதாய சீர்திருத்தவாதியாக—இலக்கியப் புரட்சிக்காரஞக ஆகி இருக்கிருன். அறிவுக்கு 144, 153-ஏ போட்டாலும் மூலை முடுக்கெல்லாம் அறிவு வளரும். இன்று எம். எல். ஏ-க்கள் என்ன செய்கின்றனர்? (Yes) (No) (Allright) என்ற நிலையிலேதானே!

இந்தி கட்டாயம் செய்யலாமா? Yes
மறுப்பு இல்லையே. No
கட்டாயம் செய்யலாமா? நல்லதா Allright
இந்த நிலைமைதானே.

இன்று மந்திரிகள் அடிக்கடி பிரசாரத்திற்கு ஏன் ஓடுகிருர்கள்? ரேடியோ, டெலிபோன் இருக்கிறதே, அங்கிருந்தே எல்லாவசதியும் செய்யலாமே! சீதையை தேடு என்று தேட வேண்டியது இல்லையே. அலைய வேண்டிய நிலைமை உண்டாகாதே, பலநாட்டிற்கு ரஷ்யாவிற்கு — அமெரிக்காவிற்கு — இங்கிலாந்திற்கு உடனே தூதுவர்களுக்கு செய்தி அனுப்பி வரவழைத்து விடலாமே. அங்கத் தேடச் சொல்லலாமே. இத்தனை மந்திரி செய்யும்வேலையை மூன்று ஐஸ்டிஸ் மந்திரி செய்யவில்லையா? மேலும் மேலும் வரி போடுகிருயே, வரி போட்டுத் தாக்குவது முறையா? ஏன் என்று கேட்டால் பதிலில்லை.

எங்கள் உள்ளத்தை—எங்கள் சுதந்திரத்தை பறிக்க முடியாது. தவறு செய்தால் நாங்கள் ஹிட்லரை—ஜாரை—முசோலினியை நினைவூட்டுகிறோம். எந்தவிதத்திலே நாம் அடிமையாக இருக்க வேண்டும்.

திராவிடம் தனிநாடாக ஆக முடியாதா? கடல்கடந்த நாட்டிலே தமிழன் துரத்தப்படுகிருன். இங்கே வரும் அகதிக்கு ரயில் அங்கு பசி! பசி!! என்று துடிக்கிருர்களே தமிழர்களாகிய அவர்களை வரவழை என்று கூறுகிறோம்

நிலை மாறவேண்டாமா?

மனிதன் முன்னேற்றம் அறிவு வளர்ந்து கொண்டே போகிறது விஞ்ஞானம் வளர்கிறது, இன்றும் மடமை இருக்கத்தான் செய்கிறது போட்டோவில் நின்ருல் வயது குறைந்துவிடும் என்கிறவரும் இருக்கத்தான் செய்கிருர்கள். 22 வயது வாலிபன் ரயிலில்கூட ஏராமல் இன்னும் இருக்கிருன். இந்த நிலை மாற வேண்டாமா?

தனியாட்சி வேண்டும்

திராவிட நாட்டுக்கு மூன்று பக்கம் கடல். ஒரு பக்கம் விந்தியமலை, நாட்டில் பருவக் காற்று. டமும் உகிரும்சோலை-இருப்பு-மாங்கனிங் - தங்கம்-விலையுடர்ந்த கற்கள் - இல்லையா! எல்லா வசதியும் பெற்ற திராவிடம் ஏன் தனியாக ஆள முடியாது" என்றும், மூட பழக்க வழக்கங்களை நீக்கி, நாடு முன்னேற ஒத்துழைக்க வேண்டுமென்றும், ஆட்சியை கவிழ்க்க நாங்கள் விரும்பவில்லை யென்று -கொடிமாற்றத்தைப்பற்றியும் கூறி தம் பேச்சை முடித்தர்.

பிறகுதலைவர் முடிவுரை கூற, செயலாளரல் நன்றி கூறப்பட்டு, கூட்டம் இனிது முடிந்தது. மழை பெய்தும் மக்கட் கூட்டம் கலையாமல்இருந்தது இவ்வளவ சிறப்பானகருத்தை எதிர்ப்பின்றி கூறுகிருர்கள் என்று மக்கள் சொல்லிக் கொண்டு சென்றது குறிப்பிடத் தக்கது. (வி.-உ.)

'தரித்திர நாராயணரின்' விருந்து-வைபவச் செலவுகள்!

1947 ஆகஸ்ட் 15 முதல் 1949 ஆகஸ்ட் 15 வரை சர்க்கார் விசேஷங்களுக்கும், விருந்துகளுக்குமாக ரூ 45-144-9-8 செலவாகியிருக்கிறதென்றும், பெரியமனிதர்கள் வருகைக்கும் அவர்களுக்குச் செய்த வசதிகளுக்கும் ஆன செலவு இதில் அடங்கவில்லை யென்றும், அது வேறு தனியாக ஆகியிருக்கிற தென்றும் மந்திரி கோபால்ரெட்டி சட்டசபையில் 22-ந்தேதி வெளியிட்டார். 1949 சுதந்திர தின விழாக் கொண்டாட்டச் செலவு இன்னும் கணக்கிடப்பட வில்லையாகையால், அதுவும் இதில் சேர வில்லை யெனக் குறிப்பிட்டார்.

குடிக் கணக்கெடுப்பு

அடுத்த குடிக்கணக்கெடுப்பு (சென்சஸ்) 1950-ம் ஆண்டு பிற்பகுதியில் நடைபெறுமென்று தெரிகிறது. மாகாண மத்திய சர்க்கார்களும், ஸ்தல ஸ்தாபனங்களும் இதற்கான ஏற்பாட்டை விரைவில் துவக்குமாம்.

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

26—11—49

தாராபுரம்:—	இரா. நெடுஞ்செழியன், எஸ். அப்பாவு, பி பழனிச்சாமி, என். இ பாலகுரு

27—11—49

இராமநாதபுரம் (கோவை):—	இரா. நெடுஞ்செழியன், எஸ். அப்பாவு பி பழனிச்சாமி, என். இ. பாலகுரு.
திருச்சி:—	(நாகை) க. அன்பழகன், டி. கே. சீனிவாசன், ஜி. பராங்குசம்.
நீடாமங்கலம்:—	(மாலை) டி கே. சீனிவாசன்.
திண்டுக்கல்:—	என். வி. நடராசன், என். முத்து.
திமிரி:—	சி. பி. சிற்றரசு.
பொட்டல்புதூர்:—	கே. வி. கே. சாமி.

ரஷ்யா-மாஸ்கோ-கோம்சாமோலியா!

கோள்களுக்கு ரஷிய ஆராய்ச்சியாளர் இட்டப் புதுப் பெயர்கள்

சோவியத்வானநூல் ஆராய்ச்சி வல்லுனர்கள் தமது ஆராய்ச்சியின் பலஞக இவ்வாண்டு மூன்று கோள்களைக் (கிரகங்களை)கண்டுபிடித்திருக்கின்றனர். அவற்றுக்கு ரஷியா, மாஸ்கோ, கோம்சாமோலியா என்று பெயரிட்டிருக்கின்றனர்.

இதுகாறும் 113 சிறுகோள்கள் (கிரகங்களை) சோவியத் வானநூல் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இப்பொழுது புதிதாகக் கண்டுபிடித்திருக்கும் மூன்று (கோள்களும்) கிரகங்களும சூரியனைச் சுற்றிவர 150 ஆண்டுகள் செல்லும் என்று சொல்லப்படுகிறது. கோம்சாமோலியா என்பது இளங் கம்யூனிஸ்டுகளை குறிப்பிடுவதாகும்.

ரஷிய விஞ்ஞானிகள் இங்ஙனம புதுப்புது கோள்களைக் (கிரகம்) கண்டு பிடித்துக் கொண்டிருக்கும் இதே நேரத்தில்தான் நாம் பஞ்சாங்கத்தை புரட்டிக்கொண்டும், பழமைக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டுமிருக்கிறோம்.. ரஷிய ஆராய்ச்சியாளர்கள் கோள்களுக்குக் கூட தம்முடைய நாட்டுப் பெயரையும், ஊர்களின் பெயரையும் இட்டு அழைக்கும் அளவுக்கு அறிவுத்துறையிலும், அரசியல் துறையிலும் முன்னேறியிருப்பதைப் பாருங்கள்.

குடகு நிர்வாகம்

தற்போதைக்கு குடகு நிர்வாகத்தை இதுவரை நடந்தது போலவே நடத்திச் செல்லவதென இந்திய சர்க்கார் முடிவு செய்து விட்டனராம்.

லிபியாவுக்கு விடுதலை

ஆப்பிரிக்காவிலுள்ள முன்னாள் இத்தாலிய காலனிகளான லிபியா, சோமாலிலாந்து, எரிட்ரியா முதலிய பகுதிகளின் எதிர்காலம்பற்றிய தீர்மானங்கள் ஐ. நா. பொதுச்சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதன்படி 1952 ஜனவரி முதல்தேதியன்று லிபியா சுதந்திரம் பெறும் என்றும், சுதந்திர அரசியல்திட்டம் தயாரிப்பதற்கு உதவியாக ஐ. நா. கமிஷனர் ஒருவர் நியமிக்கப்படுவர் என்றும் தெரிய வருகிறது.

சோமாலிலாந்து இன்னும் 10-ஆண்டுகள் கழித்தே விடுதலை பெறும் என்றும், அதுகாலம் அங்கு இத்தாலிய தர்மகர்த்தா ஆட்சிமுறை நீடிக்குமென்றும் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இத்திட்டத்தை சோமாலியர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

எரிட்ரியாபற்றி எத்தகைய முடிவும் செய்யப்படாமல் பிரச்னை ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

பதினாறடி நீள :: :: எலும்புக் கூடு!

பதினாறு அடி நீளமுடைய எலும்புக்கூடொன்று, பெருத்த மண்டையோட்டுடன் கோலாப்பூருக்கு 40 மைல் தொலைவிலுள்ள விஷாலகாடு என்ற இடத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டிருக்கிறதாம். ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு வசித்தவரின் எலும்புக்கூடு இது வென்று கருதப்படுகிறது.

ஜாதி வேறுபாட்டைக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்பன அகன்று, உயர்வு தாழ்வொழிந்த ஒப்பற்ற சமுதாயம் மலர வேண்டுமென்கிறோம் நாம்; பார்ப்பனத் தோழர்கள் ஜாதி ஒழிய வேண்டுமென்று கூறுவதின் மூலம், பிராமணர்—பிராமணரல்லாதார் என்ற பெயரை மட்டும் அப்புறப்படுத்தி விட்டு அரசியலதிகார ஏகபோகத்தையும் வர்ணாஸ்ரம ஒழுகலாறுகளையும் தொடர்ந்து நடத்தி வர ஆசைப்படுகிறார்கள்; பாடுகிறார்கள். நாம் ஜாதி ஆணவம் அழியவேண்டுமென்கிறோம்; அவர்கள் பட்டப் பெயர் மட்டும் அகன்றால் போதுமென்கிறார்கள். பட்டப்பெயர் மறைவதால் அவர்களுக்கு லாபம்; ஆணவம் அழிவதால நாட்டுக்கே லாபம்!

இத்தகைய பிற்போக்குக் கும்பலின் கோணல் புத்தியையும் கொட்டத்தையும் ஓரளவு திருத்த முயலுந்தகைமையில். சட்ட சபையில் சிலபல கேள்விகள் கேட்கப்பட்டிருப்பது கண்டு மகிழ்கிறோம். சிற்சில கேள்விகட்கு, சபைமுதலவரின் பதில் பொருத்தமும் பொறுப்பும் மற்ற முறையில் இருந்தாலும், அடிப்படையினை அவரும் ஏற்றுக்கொண்டிருப்பதற்கு நம பாராட்டு உரித்துத்தான்.

சர்க்கார் நடவடிக்கைமூலம் ஜாதி வேறுபாட்டைக் களைதல் முடியாது; மக்கள் மனமாற்றத்தால்தான் அது இயலுமென்று மந்திரி குறிப்பிட்டுள்ளார். மந்திரியாரின் கூற்று ஓரளவுக்கு உண்மையாயிருககலாம்; முற்றிலும் உண்மையாகுமா? சர்ககார் தாங்கள் செயயக்கூடிய சிலபல சட்டங்கள்மூலம் ஜாதி ஆணவ நடவடிககைகளைகுறிப்பிடத்தக்க அளவுக்கு அகற்ற முடியாதா என்று கேட்கிறோம். 'இந்து அல்லது பிராமணர் ஹோட்டல்களில் ஆதித்திராவிடர்களைவேலைக்குவைத்துக்கொள்வதில்லையே'' என்று ஒருஉறுப்பினர் கேட்டதற்கு "அவையெல்லாம் தனிப்பட்டவர்களின்நிர்வாகத்திலிருப்பவை; அவர்கள் இஷ்டபபட்டால தான்வைத்துககொள்ளலாம்'' என்று மந்திரியார் கூறியிருக்கிறாரே! ஆதித்திராவிடரை வேலைக்கு அமர்த்துக்கொண்டால்தான் 'லைசென்ஸ்' வழங்கப்படும் என்று சர்க்காரால சட்டந் திட்ட முடியாதா? நல்லெண்ணமுள்ள சர்க்காருககு இது கடினமா? இளமை மணம் தடைச்சட்டம், பலதாரமணம் விலக்குச் சட்டம், விதவை மணச் சட்டம் இன்ன பிறவற்றைப் போல, ஒரு குறிப்பிட்ட காலம் வரை பிராமண வகுப்பார் தங்கள் 'கொள்வினை - கொடுப்பினை' களனைத்தையும் வேறு வகுப்பாரிடையே தான் செய்து கொள்ள வேண்டுமென்று சட்டம் இயற்றுவதும் அதை கண்காணிப்பதும் இயலாத காரியமா? வேறு ஜாதியல்ல அதுவும் தம்மருக கீழாகப கருதபபடும் ஜாதியில திருமணஞ்செய்து கொண்டால் சர்க்கார உத்யோகம் - சலுகை - உயர்வு இன்னபுறவென்று சட்டம் வகுப்பது கூட தகாத காரியமாகி விடுமா?

ஜாதி வேறுபாடுகள் ஒழிப்பில சர்க்காருக்கு நாட்டமும் துணிவும், தீரமுமிருந்தால் இவற்றைச் செய்யலாம். அல்லது இத்தகைய ஆணவ அகங்கார ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்போரையாவது ஊக்குவிக்கா விட்டாலும் உபத்திரவம், தொல்லை, தொந்தரை, கொடுக்காமலாவது இருக்கலாம். சுயமரியாதை-திராவிட இயக்கங்கள் கடந்த 30ஆண்டுகளாகப்பணியாற்றி வருகின்றனவே, அவற்றின் இலட்சியத்தை உணரா, மந்திரியார்? ஜாதி வேறுபாடுகள் ஒழிந்த உயர்வு தாழ்வற்ற சமதர்ம சமுதாயத்தைககாண வேண்டுமென்று திராவிட இயக்கத்தின் குறிக்கோள் இக்குறிக்கோள் நிறைவேற்றத்துக்கு ஒரு சுண்டுவிரலையாவது அசைத்திருக்குமா சர்க்கார்? ஒத்துழைப்பு நல்காவிடினும், அடக்குமுறை அம்புகளையாவது வீசாமல் இருந்திருக்குமா எனக் கேட்கிறோம்.

ஜாதி வெறி ஆணவத்தைக் கண்டிக்கும் பத்திரிகைகளுக்கு ஜாமீன்; உயர்வு — தாழ்வு அகன்று ஒப்பற்ற சமுதாயம மலர வேண்டுமென்று கூறும் நூல்களுக்குத் தடை; சமுதாயத்தில் சமநிலை யேற்பட வேண்டுமென போதிக்கும நாடகங்களுக்கு 144. வகுப்புநீதி கோரும கூட்டங்களுக்குத் தடை உத்தரவு! இவற்றை ஒன்றுவிடாமற் செய்துவரும் ஒரு சர்க்காரை ஜாதியை ஒழிக்கப் பாடுபடும் சர்க்கார் என்று சொன்னால் எந்தக் கணகெட்டவனதான் நம்புவான் என்று கேட்கிறோம். அன்றியும், மக்களிடையேமது மீது இருந்துவந்தமோகத்தை, வெறியை மது விலக்குச் சட்டத்தின் மூலம் களைய வந்த சர்ககாருக்கு, அகங்கார போதையை மக்கள் உள்ளத்தினின்றும் அகற்ற சட்டம் செய்வதா கடினம் என்று கேட்டு இன்று இத்துடன முடிக்கிறோம்.

வள்ளுவரைப்பற்றியும் வில்லுப் பாட்டு

சென்னை அரசியலர் கல்லூரித் தமிழ்ச் சங்கத்தின் உதவிக்காக, நவ. 20-ம் தேதி மாலை கலைச்சலைவயாக என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் கார்த்தியாரின் வில்லுப்பாட்டை நிகழ்த்தினர். தான் மேலும் பேசும்போது, சீக்கிரமே, வள்ளுவனாரின் வாழ்க்கை வரலாற்றையும் அவர்தம் பண்பையும் அமைத்து 'வள்ளுவர் பற்றிய வில்லுப் பாட்டு' என இயற்றப்போவதாகவும் குறிப்பிட்டார்.

ஏஜண்டுகள் தேவை

கீழ்க்கண்ட ஊர்களுக்கு முன் பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை. விவரத்திற்கு எழுதவும்.

ஈரோடு

உதகை

மானேஜர்

"மாலை மணி" சென்னை

இனி நடப்பவை

திருச்சி—திருச்சி கடைவீதி தி. மு. க. கிளையின் துவக்கவிழா, 27—11—49 ஞாயிறு காலை 9 மணிக்கு, திருச்சி இரத்தினவேல் தேவர் ஹாலில் நடைபெறும். தோழர் ஜி பராங்குசம் தலைமை வகிப்பார். தோழர்கள் கே. அன்பழகன் எம். ஏ; டி. கே. சீனிவாசன் மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவர்

• • •

திண்டுக்கல்— இவ்வூர் தி. மு. க. கிளையின் சார்பில் 27—11—49 ஞாயிறு மாலை 6 மணிக்கு, இவ்வூர் மாரியம்மன் திடலில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர் பி. ராஜா தலைமையில் தோழர்கள் என். எஸ். இளங்கோ என். மூர்த்து, எம். பரமசிவம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

கோவை— கோவை நகர தி. மு. க. கிளையின் கட்டடத்தில், 27—11—49 ஞாயிறு காலை 11 மணிக்கு, கோவை நகரிலும், சுற்று வட்டாரங்களிலுமுள்ள கழகங்களின் செயற்குழுவினர்கள் மட்டும் அடங்கிய கூட்டமொன்று நடைபெறும். அதுபோது தோழர் இரா. செழுஞ்செழியன் அவர்கள் 'கழகத்தோழர்களின் கடமை'' என்பது பற்றி சொற்பொழிவாற்றுவார்கள். கீழ்க்கண்ட ஊர்களிலுள்ள கழகங்களின் செயற்குழு உறுப்பினர்களனைவரும் தவறாது வரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கோவைநகர தி. மு. கிளை, இராமநாதபுரம், செல்வபுரம், வடகோவை, சுண்டக்காமுத்தூர், குனியமுத்தூர், (நகர திராவிட மாணவர் முன்னேற்றக்கழகம். கோவை & பீளமேடு), இன்னும் நகரிலுள்ள மாவட்டக் கழக உறுப்பினர்கள்.

• • •

பொன்மலை—இவ்வூர் கலைக் கழகத்தின் சார்பில் 26-11-49 சனி மாலை, இரயில்வே வாசகசாலை மன்றத்தில், 12 வயது 'பாலகலை' குருராமலிங்கம் அவர்களது இன்னிசை விருந்து நடைபெறும்.

'சுதந்திரம் பெற்று சலித்துவிட்டோமா'?

1947—சுதந்தர விழாச் செலவைக் காட்டிலும் 1948 சுதந்தர விழாச் செலவு மிக மிகக் குறைவாகக் காணப்படுதற்குக் காரணம், 'நாம் சுதந்திரம் பெற்றுச் சலித்துவிட்டோம்' என்பதாவென்று தோழர் பி நடேசன் சட்ட சபையில் கேட்டதற்குப் பதிலளித்த மந்திரி, 'அதுவல்ல காரணம்; முதலாண்டுக்கும் இரண்டாவதாண்டுக்கும் வேறுபாடில்லையா' வென்று உரைத்தார்.

ஆலை நிர்வாகத்தைத் தொழிலாளர் ஏற்பர்!

இந்நூரிலுள்ள கல்யாண் மில் ஆலை கடந்த மூன்றாண்டு காலமாக நஷ்டத்தில் வேலை செய்கிறதென்று கூறி, அதன் நிர்வாகத்தார் ஆலையை நவம்பர் 27-ல் மூடப்போவதாக அறிவித்ததையொட்டி, மேற்படி நெசவாலையின் தொழிலாளர்கள் கூர்ந்து ஞாயிறன்று கூடி ஆலை நிர்வாகத்தைத் தாங்களே ஏற்று நடத்துவதென முடிவு செய்தனர்.

பாசிசக் கோட்டை மீதுதான் இனி தாக்குதல்

விருதுநகரில் இளங்கோ முழக்கம்

விருதுநகர், நவ. 14—

நேற்று இரவு 7-மணிக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அஞ்சல் நிலை மைதானத்தில் தோழர் மு. இளஞ்செழியன் தலைமையின் கீழ், ஒரு மாபெரும் பொதுக் கூட்டம நடைபெற்றது தலைவர் முன்னுரையில் இலட்சிய வளர்ந்த வரலாற்றை விவரித்து பேசிய பின், தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி நேருவின் அமெரிக்கா பிரயாணம் பற்றியும், வடநாட்டுச் சுரண்டலையும், ஆரிக்க வெறி பற்றியும் விளக்கிவிட்டு, ஆந்திரா, தமிழகம் பிரிவினையால் எந்த நன்மையும் கிடைக்காது என்றும், தனியாட்சி பெற்றால் தான், தமிழர்கள் தலை நிமிர்ந்து வாழமுடியுமென்றும் பேசினர்.

என். எஸ். இளங்கோ

அடுத்துப் பேசிய அதிராம்பட்டிணம் தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள் 1½ மணி நேரத்திற்குமேல் பேசும்போது காஷ்மீர் யுத்தத்திற்கு இந்திய மக்களின் வரிப்பணம் இலட்ச இலட்சமாக பாழ்படுத்தப் படுவதை விளக்கியும், பண்டித நேரு அமெரிக்கப் பயணத்தால் இந்தியாவின் பொருளாதார நிலை மிகவும் மேம்பாட்டுக்கு வரும் என்றும், கணபதி என்ற கன்னித்தமிழனை காப்பாற்றாமல் இருந்த காமன் வெல்த்தோடு, இந்தியா இணைந்து இருப்பது வெட்கப்பட வேண்டியது எனவும், அடுத்த தேர்தல் பிரச்சாரத்திற்காக மதுவிலக்கு பிரச்சாரகர்கள் என்கிற பெயரால், மது ஒழிந்தபின் ஏற்பாடு செய்து வரிப்பணத்தை பாழ்படுத்துகிறார்கள் என்றும், அடக்குமுறைகளைக்கண்டித்து பேசிவிட்டு மேலும் குறிப்பிட்டார்.

காங்கிரஸ்காரர்கள் திராவிடர் கழகமும், முன்னேற்றக் கழகமும் மூட்டிக்கொண்டு அழிந்து போகும் என கனவு காண்கிறார்கள்; பேசுகிறார்கள். ஆனால் இன்று நமது அமைதியான பணியின் மூலம், அவர்களுக்குத் தோல்வி ஏற்படும். திராவிடநாடு பெறுவதற்காக நாம் அமைத்த கோட்டையிலேயா் இன்று பெரியார் இருக்கிறார். அக்கோட்டைக்கு அருகே அடுத்து ஒரு புதுக்கோட்டை கட்டி, போர் பலத்தை அதிகமாக நாம் பெருக்கிறோமே தவிர, பழைய கோட்டையை பாழ்படுத்துவது நம் நோக்கமல்ல. நம்முடைய போர் பழைய கோட்டைமீது அல்ல, இரு கோட்டைகளையும் இடிக்கக் கருதும் பாசிசக் கோட்டை மீது தான் இனி, நம்முடைய தாக்குதல் ஆரம்பமாகப்போகிறது. அது இருபக்கமும் இருந்து வரும் இடுகிடி தாக்குதலாக இருக்கும். நாடு பிரிய வேண்டும் என்ற இலட்சியமும் விரைவில் நிறைவேறும். அதற்கு உங்கள் ஆதரவை பரிபூரணமாகத் தாருங்கள்." என்பதாகப் பேசி முடித்தார்.

துணைச் செயலாளர் எம். மாரிக்கனி நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது. (வி உ)

அமாவாசைக்குப் பலி!

பக்கிங்ஹாம் கால்வாயில் 9 பேர் மூழ்கி இறந்தனர்

நெல்லூர் அருகில் பரிதாப சம்பவம்

நெல்லூர், நவ. 21—

நெல்லூர் ஜில்லாவில் சிங்கராயகொண்டா ரயில்வே ஸ்டேஷன் அருகில், கடற்கரையோரத்திலுள்ள பள்ளபள்ளம் என்ற கிராமத்தில், நேற்று பக்கிங்ஹாம் கால்வாயை நடந்து கடந்து வந்துகொண்டிருக்கையில் 9 பேர் மூழ்கி உயிர் துறந்தனர்,

70 ராஷ்ட்ரீயர்கள் கார்த்திகை அமாவாசையையொட்டி நேற்று சமுத்திர ஸ்நானம்செய்துவிட்டு திரும்பி வந்துகொண்டிருக்கையில் இந்த விபத்து நேரிட்டது. இந்த கோஷ்டியினர் பக்கிங்ஹாம் கால்வாயை கோஷ்டி கோஷ்டியாக நடந்து கடக்க முயற்சித்தனர். 11 பேர்கள் அடங்கிய கடைசி கோஷ்டி கால்வாயை கடந்துகொண்டிருக்கையில் இவர்கள் சேற்றில் சிக்கிக்கொண்டுவிட்டனர். இவர்களை மீட்க ஆட்கள் வருவதற்குள்ளாக 9 பேர் மூழ்கி உயிர் துறந்தனர்.

சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு போலீசார் உடனேவந்து பிரேதங்களை மீட்டனர்.

கொச்சி-திருவாங்கூர் சென்னையுடன் இணைப்பு

கள்ளிக்கோட்டை, நவ. 21—

சென்னை மாகாணத்துடன் கொச்சி திருவாங்கூர் யூனியன் ஐக்கியமாக வேண்டுமென்று வற்புறுத்தும் தீர்மானம் ஒன்று இன்று காலை நடைபெற்ற மலபார் ஜில்லா காங்கிரஸ் குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. இதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த தீவிரமாக பிரசாரம் செய்ய ஆரம்பிக்கும்படி மலையாளம், அதை அடுத்த பிரதேசங்களிலுள்ள மக்களையும், கொச்சி—திருவாங்கூர் யூனியன் மக்களையும் வேண்டிக்கொள்வதாகவும் இந்த நடவடிக்கை ஐக்கிய கேரள மாகாணம் அமைக்கப்படுவதற்கு சௌகர்யமாக இருக்குமென்றும், இந்த யூனியனிலுள்ள பிரதேசங்கள் சமஸ்தானங்களாக இருந்தவைகளுடன் இணைவதற்கே முடியாதென்றும் அந்த தீர்மானத்தில் மேலும் கூறப்பட்டிருக்கிறது. மலபாரிலும் அதன் சுற்றுப்புறத்திலுமுள்ள மக்கள், ராஜ பிரமுகர் தலைமையிலுள்ள சமஸ்தானத்துடன் இணைவதை எதிர்ப்பதாகவும் தீர்மானம் கூறுகிறது.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street Madras-1